ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1782/28 - 2012 ඔක්තෝබර් මස 31 වැනි බදාදා - 2012.10.31

*1782/28 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்*

*3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தல்*

*திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ரோஹண ராஜபக்ஷ ஆகிய நான், முதலீடு மற்றும் உல்லாசப் பயணத்துறை என்ற விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற அடிப்படையில் இவ்வறிவிப்பின் மூலம் வெளிப்படுத்துவதானது:*

*(1) 2012, யூலை 04 ஆந் திகதிய 1765/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலானது மேற்கூறப்பட்ட சட்டத்தின் நோக்கங்களுக்காக மேல் மாகாணத்தில், கொழும்பு 1 கோட்டையில் அமைந்துள்ள சொகுசு ஹோட்டல் உள்ளடங்கிய ஒரு கலப்பு பிரயோகக் கட்டிடத்தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு, கட்டியெழுப்புவதற்கு மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான கருத்திட்டம் ஒன்றை செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக அடையாளங்கண்டது,*

*(2) மேல் மாகாணத்தில், கொழும்பு 1 கோட்டையில் அமைந்துள்ள சொகுசு ஹோட்டல் உள்ளடங்கிய ஒரு கலப்பு பிரயோகக் கட்டிடத்தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு, கட்டியெழுப்புவதற்கு மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான கருத்திட்டமானது செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக வெளிப்படுத்துவதற்கு 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அமைச்சரவை அமைச்சர்களின் அங்கீகாரத்தைப் பெற்றது.*

*(3) மேற்கூறிய செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமானது "மேல் மாகாணத்தில் கொழும்பு 1 கோட்டையில், அமைந்துள்ள சொகுசு ஹோட்டல் உள்ளடங்கிய ஒரு கலப்பு பிரயோகக் கட்டிடத்தொகதியொன்றை நிர்மாணிப்பதற்கு, கட்டியெழுப்புவதற்கு மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான கருத்திட்டம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமானதுடன் கருத்திட்ட நிறுவனமானது வெல்கம் ஹோட்டல்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிடெட் ஆகும்.*

*(4) மேற்கூறப்பட்ட "மேல் மாகாணத்தில், கொழும்பு 1 கோட்டையில் அமைந்துள்ள சொகுசு ஹோட்டல் உள்ளடங்கிய ஒரு கலப்பு பிரயோகக் கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு, கட்டியெழுப்புவதற்கு மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான கருத்திட்டம்" இதற்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட சலுகைகள்/விலக்களிப்புகளை வழங்குகின்ற பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக வெளிப்படுத்துவதற்கு கருத்திட்டத்தின் அங்கீகாரம் பெறப்பட்ட திகதியிலிருந்து அறுபது மாதங்களுக்குள் (60) அதன் வர்த்தக நடவடிக்கைகளைத் தொடங்குதல் வேண்டும்.*

*(5) இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களிலுள்ள விலக்களிப்புகள் அதில் குறிப்பிட்ட மட்டுப்பாடுகளுக்குட்பட்டதாக கருத்திட்ட நிறுவனத்திற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.*

**அட்டவணை**

***அ. 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்:***

(i) *பத்து வருடங்களுக்கு (''வரி விலக்களிப்புக் காலப்பகுதி'') கருத்திட்டம் மூலமாக ஈட்டும் இலாபம் மீது கருத்திட்ட நிறுவனத்திற்கு வருமான வரி விதிப்பு தொடர்பில் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகமாகாது. மேற்சொல்லப்பட்ட பத்து (10) வருட வரி விலக்களிப்புக் காலப்பகுதியிலும் அதன் பின்னர் ஒரு (01) வருட காலத்துக்கும் இலாபங்களில் இருந்து பங்குதாரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கு இலாபங்களுக்கு வருமான வரி விலக்களிப்படும்.*

(ii) *சொல்லப்பட்ட வரி விலக்களிப்புக் காலமானது கருத்திட்ட நிறுவனம் விதிப்பனவுக்கான இலாபத்தை ஈட்டும் முதல் ஆண்டு அல்லது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்து மூன்று வருடங்கள் ஆகிய இரண்டில் எக்காலப்பகுதி முன்னர் வருகின்றதோ, அந்த நாள் முதல் ஆரம்பமாகும்.*

(iii) *அதன் பின்னர் (உட்பிரிவு)* (i) *இல் குறிப்பீடு செய்யப்பட்ட வரி விலக்களிப்புக் காலப்பகுதியின் இறுதித் திகதியை உடன் அடுத்து வரும் மேலும் ஒரு பதினைந்து (15) வருடக் காலப்பகுதி ஒன்றுக்கு கருத்திட்ட நிறுவனத்தின் இலாபம் மற்றும் வருமானம் மீதான வரிவிதிப்பு தொடர்பில் ஹோட்டல்துறை மீது அப்போது அமுலில் இருக்கும் வரி வீதத்தின் ஐம்பது வீதம் (50%) அல்லது ஆறு சத வீதம் (6%) ஆகிய இரண்டில் குறைந்ததற்கு ஓர் பகுதி விலக்களிப்பு வழங்கப்படும். (''வரிச்சலுகைக் காலப்பகுதி'')*

(iv) *மேலே குறிப்பீடு செய்யப்பட்ட வரிவிலக்களிப்புக் காலப்பகுதி மற்றும் வரிச்சலுகைக் காலப்பகுதியின் பின்னர் கருத்திட்ட நிறுவனத்தின் இலாபங்கள் மற்றும் வருமானத்தின் மீதான வரி விதிப்பு தொடர்பில் அக்காலத்தில் அமுலில் இருக்கும் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய மேற்கொள்ளப்படல் வேண்டும்.*

(v) *கருத்திட்ட நிறுவனத்தின் வெளிநாட்டு ஊழியர்கள், எந்த ஒரு சமயத்திலும் ஆகக்கூடியது இருபது (20) பேர்களுக்கு பிரயோகமாகும் என்ற வரையறைக்குட்பட்டு உழைத்துச் செல்லும் வரியிலிருந்து* (PAYE) *விலக்களிக்கப்படுவர். இந்தச் சலுகை வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஐந்து (05) வருட காலப்பகுதிக்கு ஏற்புடையதாகும். கருத்திட்ட நிறுவனமானது நன்முயற்சிகள் அடிப்படையில் படிப்படியாக வெளிநாட்டு ஊழியர்களினை உள்நாட்டு ஊழியர்களினால் பதிலீடு செய்தல் வேண்டும்.*

(vi) *பெறுநர்கள் உள்நாட்டு இறைவரிச்சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் சகல வருமான வரிகளிலிருந்தும் முற்றாக விலக்களிக்கப்படுவதுடன் பின்வரும் விடயங்கள் தொடர்பில் தடுத்து வைக்கும் வரி செலுத்துவதில் இருந்து கருத்திட்ட நிறுவனத்திற்கு விலக்களிப்பு வழங்கப்படும்:-*

*(அ) மூலதனச் செலவுக்காகப் பெறப்பட்ட வெளிநாட்டு கடன் மீதான வட்டி.*

*(ஆ) உசாத்துணையாளர்களுக்குச் செலுத்தப்பட்ட தொழில்நுட்பக் கட்டணம்.*

*(இ) முகாமைத்துவக் கட்டணங்கள் மொத்த வருமானத்தில் இருந்து மூன்று வீதம் (3%).*

*(ஈ) பங்கு வீத உரிமைத்தொகைக் கொடுப்பனவுகள் மொத்த வருமானத்தில் ஒன்று தசம் ஐந்து வீதம் (1.5% வரை).*

*(உ) சந்தைப்படுத்தல் கட்டணங்கள் மொத்த வருமானத்தில் ஒன்று தசம் ஐந்து வீதம் (1.5% வரை).*

(ஊ) ஊக்குவிப்பு முகாமைத்துவக் கட்டணங்கள் மொத்த செயற்பாட்டு இலாபத்தின் பத்து சதவீதம் (10% வரை).

(எ) வரையறுக்கப்பட்ட ஐரீசீ (ITC) நிறுவனத்தின் அல்லது கருத்திட்ட நிறுவனத்தின் ஏனைய சேவை வழங்குநர்களினால் மத்திய ஒதுக்கீட்டு முறைமையினூடாக (Central Reservation System) மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளுக்கான அறவீடுகள். இந்த ஒப்பந்த திகதியின்போதான காலத்தில் அமுலில் இருக்கும் இவ்வாறான ஒதுக்கீடுகளுக்கான அறவீடுகள் ஒரு ஒதுக்கீட்டுக்கு அமெரிக்க டொலர்கள் 5 – 6 எனும் வீச்சில் இருக்கும்.

ஆ. ***2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம்***:

*கருத்திட்ட நிர்மாண காலகட்டத்தின் போது இறக்குமதி செய்யப்படும் மற்றும் உள்நாட்டில் கொள்வனவு செய்யப்படும் கருத்திட்டம் தொடர்பான பொருட்கள் மற்றும் சேவைகள் என்பன மீது பெறுமதி சேர் வரி செலுத்துதலிலிருந்து முழு விலக்களிப்பு வழங்கப்படும். இப் பெறுமதி சேர் வரிச்சலுகையானது கருத்திட்ட நிறுவனம்/கருத்திட்டத்துக்கான நேரடி வழங்குகைகளுக்கு மட்டுமன்றி கருத்திட்ட நிறுவனம்/கருத்திட்டத்துக்கான வழங்குகைகளுக்கு கருத்திட்ட நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டவாறான உப ஒப்பந்தக்காரர் ஒருவரால் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு விநியோகிப்பதற்கு மேற்கொள்ளப்படும் வழங்குகைகளுக்கும் ஏற்புடையதாகும்.*

*வர்த்தக நடவடிக்கைகள் தொடங்குகின்றபோது கருத்திட்ட நிறுவனத்தினால் விநியோகப் பெறுமதிசேர் வரி 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.*

இ. ***2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி விதிப்பனவுச் சட்டம்***:

*கருத்திட்ட நிர்மாண காலகட்டத்தின் போது கருத்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக இறக்குமதி செய்யப்படும் (கருத்திட்ட நிறுவனத்தினால் நேரடியாக இறக்குமதி செய்யப்படுபவை அல்லது ஒப்பந்தக்காரர்களினூடாக பெறப்படுபவை) எல்லாப் பொருட்கள் மீதுமான துறைமுக மற்றும் விமான நிலைய விதிப்பனவிலிருந்து முழுமையாக விலக்களிக்கப்படும்.*

ஈ. ***2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம்***:

*கருத்திட்டம் தொடர்பில் கட்டிடக் கைத்தொழில் உத்தரவாத நிதிய விதிப்பனவிலிருந்து கருத்திட்ட நிறுவனத்தினால் விலக்களிப்பு வழங்கப்படும்.*

உ. ***சுங்கக் கட்டளைச் சட்டம் (235 ஆம் அத்தியாயம்)***:

*கருத்திட்ட நிர்மாண காலகட்டத்தின் போது கருத்திட்டத்தின் நோக்கத்துக்காக இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் கருத்திட்ட நிறுவனத்தின் பெயரில் கருத்திட்ட கம்பனியால் நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டதாயினும் சரி அல்லது ஒப்பந்தக்காரர்களினூடாக இறக்குமதி செய்யப்பட்டதாயினுமான எல்லாப் பொருட்களுக்கும் சுங்கத் தீர்விலிருந்து விலக்களிப்புச் செய்யப்படுவதுடன் கருத்திட்ட நிறுவனத்திற்கு தேவைப்படுத்தப்படும் விடயங்கள் தொடர்பில் கருத்திட்டத்தின் எல்லா இறக்குமதிகளுக்கும் சுங்கத் தீர்வை விலக்களிப்பு ஏற்புடையதாகும்.*

பசில் ரோஹண ராஜபக்ஷ, பா. உ.,
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
*2012, ஒற்றோபர் 30.*

*11-623*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.